பக்கங்கள் 18

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 21 புதன்கிழமை 08.101.2023 அதிர்வு 100

## நூறாவது நாளில் உங்களின் 'முரசு'

'முரசு' டிஜிட்டல் நாளிதழ் முகிழத் தொடங்கி இன்று நூறாவது நாள். இன்று 'மாலை முரசு' நூறாவது இதழ் உங்கள் கைகளில். காலை முரசின் நூறாவது இதழ் நாளை காலை வெளியாகும்.

# 'சமஷ்டி' தீர்வே எமக்கு வேண்டும்

### நல்லூர் கிட்டு பூங்காவில் திரண்ட மக்கள்





(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையில் வடக்கு - கிழக்கு தமிழரின் இணைப்பாட்சி (சமஷ்டி) கோரிக்கை யின் தோற் றம் தொடர் பான கண் காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டலும் யாழ்ப் பாணத்தில் இன்று நடை பெற்றது. 04

## பெரியம்மாவை சுட்டுக்கொன்ற பெறாமகன்!



(அனுராதபுரம் நிருபர்)

குடும்பப் பெண்ணொருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். 04

## மத்திய மாகாணத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு திங்கள் விசேட விடுமுறை




தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை (13) மத்திய மாகாணத்தில் உள்ள தமிழ்ப் 04

## களுத்துறையில் கோர விபத்து!

### 13 பேர் படுகாயம்



(களுத்துறை நிருபர்)

களுத்துறை - நாகொட பகுதியில் இன்று காலை இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று விபத்துக் குள்ளாகியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த 13 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாபலகம பகுதியில் 04

## காசல்ரீ நீர்த்தேக்கத்தில் ஆண் ஒருவரின் சடலம்



(மஸ்கெலியா நிருபர்)

காசல்ரீ நீர்த்தேக்கத்தில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஹட்டன் நோர்வூட் பொலிஸ் 04

## இரு பெண்கள் இன்று கழுத்தறுத்துக் கொலை

(களுத்துறை நிருபர்)

இருவேறு இடங்களில் பெண்கள் இருவர் இன்று கழுத்தறுத்துப் படு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஹோமாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இன்று காலை 22 02

### திருமலை கடற்படை முகாமுக்குள்

## சிப்பாய் ஒருவர் குத்திக் கொலை



(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை கடற்படை முகாமுக்குள் கடற்படைச் சிப்பாய் 04

## கைதான தமிழக மீனவர்களின் விளக்கமறியல் மேலும் நீடிப்பு

(ந.லோகதயாளன்)

தமிழக மீனவர்கள் விடயத்தில் படகின் உரிமையாளர்களைக் குற்றவாளிகளாக இணைக்க முடியுமா என்பது தொடர்பில் எதிர்வரும் 15ஆம் திகதி கட்டளையாக்கப்படும் என்று ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார். 04







(படங்கள்:எஸ்.நிதர்ஷன்)





இலங்கையில் வடக்கு – கிழக்கு தமிழரின் இணைப்பாட்சி (சமஷ்டி) கோரிக்கையின் தோற்றம் தொடர்பான கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டலும் யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## இரு பெண்கள்...

வயதுடைய யுவதி ஒருவர் கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலையைச் செய்தார் எனச் சந்தேகிக்கப்படும் நபர் பிரதேசத்தை விட்டு ஓடிச் சென்று களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையில் தான் சுகயீனமடைந்திருப்பதாகக் கூறி அனுமதிக்கப்பட்டபோது கைது செய்யப்பட்டுள்ளார் என்று களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் தெஹிவளை, எண்டர்ன் வீதி பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஹோமாகம பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய அச்சினி துஷாரி என்ற யுவதியே இன்று காலை ஹோமாகம நீதிமன்ற வீதியில் வைத்துக் கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

யுவதியின் காதலனே இந்தக் கொலையைப் புரிந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் இன்று காலை களுத்துறை நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவரது சட்டைப் பையில் இரத்தக் கறை காணப்பட்டுள்ளது.

களுத்துறை தெற்கு தலைமையகப் பொலிஸ் பரிசோதகர் ருவன் விஜேசிங்கவின் பணிப்புரைக்கமைய மேலதிக விசாரணைகளின்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பொலிஸ் பாதுகாப்பில் களுத்துறை நாகொட போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை, கிரிந்திவெல ஊரா பொல பிரதேசத்தில் வீடொன்றில் இருந்து கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்ட பெண்ணொருவரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது என்று கிரிந்திவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் 35 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயான கே.ஏ.சஞ்சீவனி எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் பல வருடங்களாக வெளிநாட்டில் தொழில் செய்து வருகின்றார் எனவும், அந்தப் பெண் கணவரின் தாய், தந்தை மற்றும் சகோதரருடன் கணவரின் வீட்டில் வசித்து வந்தார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த பெண் வீட்டின் வரவேற்பறையில் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்ட அந்தப் பெண்ணின் கணவரின் தாயார், சம்பவம் தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் தாயாருக்கு அறிவித்தார். அதையடுத்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

பூகொட நீதிமன்ற பதில் நீதிவான் கமல் சம்பந்த பெரும சம்பவ இடத்துக்கு வந்து சடலத்தைப் பார்வையிட்டார்.

சடலத்தை வத்துபிட்டிவல வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லுமாறு உத்தரவிட்ட நீதிவான், அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் பொலிஸாரைப் பணித்தார்.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் மைத்துனர் (கணவரின் சகோதரன்) கொலைக்குப் பின்னர் தலைமறைவாகியுள்ளார் எனவும், கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் கிரிந்திவெல பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.





# இலங்கையின் புதிய தூதர்கள் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு!

**(எஸ்.கீதபொன்கலன், நூருல் ஹுதா உமர், ஹஸ்பர், அப்துல்சலாம் யாசீம்)**

இலங்கையின் புதிய தூதர்களாக நியமனம் பெற்றவர்கள் கிழக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அபிவிருத்தி, சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு தொடர்பில் அவர்கள் கலந் துரையாடியுள்ளனர் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

இலங்கையின் புதிய தூதர்களாக நியமனம் பெற்ற இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், எகிப்து, இத்தாலி, கியூபா, பங்களாதேஷ், பெல்ஜியம் இராச்சியம் மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளுக்கானவர்கள் மற்றும் பதவி நிலைகளுக்கான பணிப்பாளர்கள் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் மரியாதை நிமித்தம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை நேற்று (07) சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலில் சுற்று லாத்துறையை மேம்படுத்துதல், கைத் தொழில் பேட்டை ஸ்தாபிப்பு , கனிமத் துறைகளின் அபிவிருத்தி, கூட்டு முயற்சி விவசாய அபிவிருத்தி மற்றும் கால்நடை அபிவிருத்தி போன்ற துறைகளை அவர்கள் நியமிக்கவுள்ள நாடுகளுடன் இணைந்து முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

# பொதுச் சுகாதார அதிகாரிகள் மஸ்கெலியா நகரில் சோதனை

**(மஸ்கெலியா நிருபர்)**

பாவனையாளர் நலன் பேணும் வகையில் தீபாவளிக்கு உணவு, மற்றும் பொருள்களைப் பாதுகாப்பான முறை யில் வழங்கும் நோக்கில் மஸ்கெலியா நகரில் உள்ள உணவகங்கள் மற்றும் அனைத்து வர்த்தக நிலையங்கள் பொது சுகாதார பரிசோதகர்களால் விசேட பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டன.

இதன் போது பல வர்த்தகர்கள் சட்டத்தின் பிடியில் சிக்கியுள்ளனர்.

எதிர்வரும் தீபாவளி பண்டிகையின் போது பொது மக்களுக்கு பாதுகாப்பான உணவு மற்றும் பொருள்களை வழங்கும் நோக்கில் மஸ்கெலியாவில் இன்று (08) அவசர பரிசோதனையை மேற்கொள் ளப்பட்டது.

மஸ்கெலியா மாவட்ட வைத்திய அதி காரி அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட



சோதனையின் போது சுகாதாரமற்ற முறையில் உணவகங்கள் மற்றும் பேக்கரிகளை நடத்தியவர்கள், காலாவ தியான பொருள்களை விற்பனை செய்தவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று மஸ்கெலியா பொது சுகாதார பரிசோதகர் பி.நரேந்திரா தெரிவித்தார்.

அந்த வர்த்தகர்களுக்கு எதிராக ஹட்டன் மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய் யப்படவுள்ளது என்று பொது சுகாதார பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

# வவுணதீவில் குளவி தாக்கி 8 மாணவர்கள் பாதிப்பு!

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தில் பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் மீது பனை மரத்தில் இருந்து கலைந்த குளவி தாக்கியதில் 8 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தாண்டியடி வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று புன்கிழமை (08) காலை 7 மணியளவில் இடம்பெற்றுள் ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு கன்னங்குடா மகாவித்தி யாலயத்தில் கல்வி கற்று வரும் மாண வர்கள் சம்பவதினமான இன்று காலை 7 மணியவில் வீதியால் நடந்து பாட சாலைக்குச் சென்று கொண்டிருந்த போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறிஞ்சாமுனை பகுதியில் வீதிக்கு அருகிலுள்ள பனைமரத்தில் கூடுகட்டி யுள்ள குளவிகள் கலைந்திருந்த நிலையில் மாணவர்களைத் தாக்கியுள் என.

இந்த குளவி கூடு கட்டியுள்ள பனை மரங்களில் இருந்து கூடுகளை அகற்றும் நடவடிக்கையை பொலிஸார் மேற் கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்



## களுத்துறையில்...

இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அரச பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஒரே திசையில் பயணித்த ஓட்டோ ஒன்று திடீரென வலது பக்கம் நோக்கித் திரும்ப முற்பட்டபோது பஸ் சாரதி விபத்தைத் தவிர்க்க முற்பட்டுள்ளார். இதன் போது பஸ் வீதியை விட்டு விலகி சுவரில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. ஓட்டோவும் விபத்தில் சிக்கியுள்ளது.

ஓட்டோ சாரதி, பஸ் சாரதி மற்றும் பஸ்ஸில் பயணித்த 11 பேர் உட்பட 13 பேர் படுகாயங்களுடன் நாகொட வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## மத்திய...

பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் இது தொடர்பான கோரிக்கையை மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யு.கமகேவிடம் விடுத்திருந்தார்.

அந்தக் கோரிக்கையை ஏற்று திங்கட்கிழமை விடுமுறை வழங்குவதற்கும், அந்த நாளுக்குரிய கல்வி நடவடிக்கையை ஈடுசெய்வதற்காக எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை மத்திய மாகாணத்தில் தமிழ்ப் பாடசாலைகளை நடத்துவதற்கும் ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தமது கோரிக்கையை ஏற்று, தமிழர்களின் முக்கிய பண்டிகைகளுள் ஒன்றான தீபாவளிக்கு விசேட விடுமுறை வழங்க நடவடிக்கை எடுத்த மத்திய மாகாண ஆளுநருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன் நன்றி தெரிவித்துள்ளார்.

## பெரியம்மாவை...

இந்தச் சம்பவம் அனுராதபுரம் மாவட்டம், இராஜாங்கனைப் பிரதேசத்தில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

நான்கு பிள்ளைகளின் தாயாரான 54 வயதுடைய ஆர். டயானா என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

அவரது வீட்டில் வைத்து உள்நாட்டுத் துப்பாக்கியால் அவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அவரது இளைய சகோதரியின் 23 வயது மகனைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

காணிப் பிரச்சினை காரணமாகத் தனது பெரியம்மாவைச் சந்தேகநபர் சுட்டுக் கொலை செய்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## காசல்ரீ...

பிரிவுக்குட்பட்ட காசல்ரீ கடை வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையே அந்த வீதியில் உள்ள சனசமூக நிலையத்துக்கு அருகில் நீர்த்தேக்கத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று இரவு காணாமல்போயிருந்த நிலையில் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

56 வயது மதிக்கத்தக்க விக்கிரம ஆராச்சி லாகே ஜெய திஸ்ஸ என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## ‘சமஷ்டி’...

வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் க. லவகுசராசா தலைமையில் வடக்கு – கிழக்கிலிருந்து வருகை தந்த பெருமளவிலான மக்களின் பங்கேற்புடன் நல்லூர் கிட்டு பூங்காவில் இன்று காலை இந்த நிகழ்வு நடைபெற்றது.

வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் கடந்த 2022 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட வடக்கு – கிழக்கு மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வு வேண்டிய 100 நாள் செயல் முனைவின் இறுதி நாளான 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி வடக்கு – கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வாக “ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு வேண்டும்” எனும் மக்கள் பிரகடனம் வெளியிடப்பட்டிருந்தது.

இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டு ஓராண்டு பூர்த்தி நாளான இன்று வடக்கு – கிழக்கு மக்களின் பங்கேற்புடன் “இலங்கையின் வடக்கு – கிழக்குத் தமிழரின் இணைப்பாட்சி (சமஷ்டி) கோரிக்கையின் தோற்றம்” எனும் கண்காட்சியும் வரலாறுத் தெளிவூட்டல் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், வடக்கு – கிழக்கு வாழ் பொது மக்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள், மனித உரிமை பாதுகாவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## கைதான...

இலங்கையின் ஊர்காவற்றுறை நீதிமன்ற எல்லைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழகத்தைச் சேர்ந்த 5 படகுகள் மற்றும் 26 மீனவர்கள் தொடர்பான வழக்கு இன்று மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்படி இடைக்கால கட்டளையை நீதிவான் வழங்கினார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி கைது செய்யப்பட்ட 12 மீனவர்கள் மற்றும் 3 படகுகளினதும், 27 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 14 மீனவர்களினதும் இரு படகுகளினதும் குற்றப் பத்திரிகை யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழில் திணைக்களம் சார்பில் மன்றில் தாக்கல் செய்யப்பட்டது. இதில் ஒரு படகின் உரிமையாளர் உள்ளிட்ட நால்வர் குற்றவாளிகளாக இணைக்கப்பட்ட நிலையில் நால்வரும் படகில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருப்பதன் பெயரில் மன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்த நால்வரில் படகின் உரிமையாளர் உள்ள நால்வருக்கும் எதிரான 3 குற்றச்சாட்டுக்களுக்கும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தலா 6 மாதங்கள் கொண்டதான 18 மாதச் சிறைத் தண்டனையுடன் விடுவிக்கப்பட்டதோடு படகு அரச உடமையாக்கப்பட்டது.

இதேநேரம் எஞ்சிய 4 வழக்குகள் சார்பிலும் படகில் கைதான 22 மீனவர்களுடன் படகு உரிமையாளர்கள் நால்வருமாக 26 பேருக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு படகின் உரிமையாளர்கள் முதலாம் எதிரியாக இணைக்க வேண்டும் என அரச சட்டத்தரணியான நாகரத்தினம் நிசாந்தன் மன்றுரைத்தார்.

இதன்போது மீனவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஏ.நிரோஸ் 2018ஆம் ஆண்டு திருத்திய சட்டத்தில் உரிமையாளர் எதிரி என எங்குமே குறிப்பிடப்படவில்லை. எனவே, எல்லை தாண்டும்போது படகில் இல்லாத உரிமையாளரைக் குற்றவாளியாக இணைக்கக் கூடாது எனக் கோரினார்.

இதனை ஆராய்ந்த நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முதலாம் எதிரியாகப் படகின் உரிமையாளர்களை இணைப்பது தொடர்பில் 15 ஆம் திகதி கட்டளையிடப்படும் என இடைக்கால கட்டளை வழங்கி வழக்கை 15 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து மீனவர்களின் விளக்கமறியலையும் அன்றைய திகதி வரை நீடித்தார்.

## சிப்பாய்...

ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இன்று அதிகாலை 2.45 மணியளவில் உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நாவிக நெவி பண்டார என்ற பெயர் வழங்கப்பட்டுள்ள நிலையில் மற்றைய விபரங்கள் எதுவும் வழங்கப்படவில்லை என்று வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் துறைமுகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மூதூரில் நடைபெற்ற கண்காட்சி

(ஹஸ்பர்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மூதூர் ஜே.எம்.ஐ. நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இலவச கண்காட்சி கடந்த மாத இறுதியில் மூதூர் ஆசிரியர் வாண்மை விருத்தி மையத்தில் நடைபெற்றது.

ஐந்து நாள் கொண்ட இந்த இலவசக் கண்காட்சியில் மூதூர் மண் சார்ந்து வெளிவந்த நூல்கள், சஞ்சிகைகள், கையேடுகள், குறுந்திரைப்படங்கள், புகைப்படங்கள், ஓவியங்கள் போன்ற வெளியீடுகளோடு மூதூர் சார்ந்த தொன்மையான பழங்கால பொருள்கள் மற்றும் கலைஞர்களின் நேர்காணல் என்று பல்வேறு இலக்கிய மற்றும் பண்பாட்டியல் சார்ந்த அம்சங்களை காணக் கூடியதாக இருந்தது.

கண்காட்சியில் முதன்மை அழைப்பாளர்களாக மூதூர் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி இஸட்.எம்.எம். முனவ்வறா நளீம், மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், கிழக்கு மாகாண கலாசாரப் பண்பாட்டு அலுவல்கள் பணிப்பாளர் சி.நவனீதன், மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாறக், உதவி பொலிஸ் அத்தியட்சகர், மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மூதூர் தள வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் மோகனகுமார், வைத்தியர் ஜனாப் கே.எம்.ஷாஹிர், சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.எம்.லாஹிர், லயன்ஸ் கழக ஒருங்கிணைப்பாளர்களான கதிர் திருச்செல்வம், ஜனாப் இல்யாஸ் முபாரிஸ், ஆசிரியர் வள நிலைய முகாமையாளர் எம்.மாஹிர் ஆகியோர் கலந்து கொண்டனர்.








# மட்டக்களப்பு ஹரி சிறுவர் இல்லத்துக்குக் கௌரவம்!

(பழுவூரான்)

கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை (05) திருகோணமலையில் நடத்தப்பட்ட சர்வதேச சிறுவர் தின நிகழ்வில், ஹரி இல்லச் சிறுவர்களுக்குக் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள 51 சிறுவர் இல்லங்களில் பொதுப் பரீட்சையின் உயர் பெறுபேறு, பல்கலைகழக அனுமதி மற்றும் இணைப்பாட விதானச் செயற்பாட்டில் திறமை காட்டியவர்கள் இதன் போது பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

ஹரி இல்லச் சிறுவர்கள் பல் கலைகழகம் தெரிவாகியமை, சாதாரண தர பரீட்சையில் அதிக சித்தி பெற்றமை, கிழக்கு மாகாணத்தில் உள்ள இல்லங்களில் கல்வி செயற்பாடுகளில் முன்னிலையாக திகழ்கின்றமை உள்ளிட்ட செயற்பாடுகளில் முன்னிலை வகிக்கின்ற வகையில் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கிரிக்கெட் அரசியல்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஆட்டங்களில் விளையாடும் இலங்கை அணி எதிர் அணிகளுக்கு சரியான சவால் தரும் விதத்தில் ஆடுகின்றதோ, இல்லையோ, கிரிக்கெட்டை வைத்து நமது அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் விளையாடும் அரசியல் சித்து விளையாட்டு மட்டும் 'சபாஷ் சரியான போட்டி' என்று ஆரவாரிக்கும் அளவில் படுஜோராகப் போகின்றது.

இலங்கைக் கிரிக்கெட் அணியில் உள்வீட்டுச் சண்டை - உதைபந்தாட்டத்தில் 'ஸேம் சைட் கோல் அடிப்பது போல' - உள்குத்து மோதலாக இருக்கின்றதோ என்னவோ தெரியவில்லை. ஆனால், இலங்கை கிரிக்கெட்டை நிர்வகிக்கும் நிறுவனத்திலும் அதை மேற்பார்வை செய்து கண்காணிக்கும் அதிகாரமுடைய தரப்பாகத் தன்னை முன்னிலைப் படுத்தும் இலங்கை அரசிலும் இந்தக் கிரிக்கெட் விடயங்களை முன்னிறுத்தி உள்வீட்டு அக்கப்போர் கனகச்சிதமாக முன்னெடுக்கப்படுகிறது.

இலங்கைக் கிரிக்கெட் தொடர்பில் நாட்டின் ஜனாதிபதிக்கும், அவரது விளையாட்டுத்துறை அமைச்சருக்கும் இடையிலேயே நேரடி லடாய். வெளிப்படையாக - பகிரங்கமாக - கருத்து நிலைப்பாட்டிலும் செயற்பாட்டிலும் இருவரும் மோதிக் கொள்ளும் நிலையில் நாட்டின் கிரிக்கெட் உருப்பட்ட மாதிரிதான்.

பல நூறு கோடி ரூபா நிதி மாதாந்தம் புரளும் கிரிக்கெட் கட்டமைப்பில் பெரும் ஊழல், மோசடி, நிதி சூறையாடல் என்று தெரிவிக்கின்றார் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க.

அதை வெறும் வாய்ச்சவடால் பேச்சாகக் கூறாமல் - குற்றம் சுமத்தாமல் - உரிய விசாரணை நடத்தி, நிரூபியுங்கள் என்று சவால் விடுகின்றனர் ஸ்ரீலங்கா கிரிக்கெட் அமைப்பின் நிர்வாகிகள்.

இந்தப் பின்புலத்தில் இப்போதைய உலகக் கிண்ணக் கிரிகெட் ஆட்டங்களில் இலங்கை அணியின் மிக மோசமான பெறுபேறுகளை அடுத்து எழுந்துள்ள அதிருப்தி நிலையை சாதகமாகப் பயன்படுத்தி, 'ஸ்ரீலங்கா கிரிக்கெட்' நிர்வாக கட்டமைப்பைக் கலைத்து விட்டு தாம் விரும்பிய ஏழு பேர் கொண்ட இடைக்கால குழு ஒன்றை அந்த அமைப்பை நிர்வகிப்பதற்கு விளையாட்டு துறை அமைச்சர் நியமித்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன் அனுமதியின்றி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. உடனடியாக அந்த ஏழு பேர் கொண்ட இடைக்கால சபையைக் கை வாங்கும் படியும், இல்லையேல் விளையாட்டுத்துறை அமைச்சையே தனது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விடுவார் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னை அழைத்து அச்சுறுத்தினார் என நாடாளுமன்றத்திலேயே தகவல் வெளியிட்டிருக்கின்றார் விளையாட்டுத் துறை அமைச்சர்.

'ஜனாதிபதி விரும்பினால் விளையாட்டுத் துறை அமைச்சர் பதவியில் இருந்து என்னை நீக்கட்டும். நான் அந்த இடைக்கால அமைப்பைக் கைவாங்கவே மாட்டேன்' என்று உறுதியாகத் தெரிவித்துவிட்டார் விளையாட்டுத்துறை அமைச்சர்.

எனினும், இந்த இடைக்கால சபையை அமைக்கும் வர்த்தமானி அறிவித்தலை இரண்டு வாரங்களுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைநிறுத்தி வைத்திருக்கின்றமையால் சர்ச்சைச் சூடு இப்போது சற்று அடங்கியிருக்கிறது - நீறு பூத்தநெருப்பாக.

உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் நமது நாட்டு அணி சோபிக்கவில்லை. ஆனால் கிரிக்கெட் அரசியல் இங்கு உள்நாட்டில் சூடு கிளப்புகின்றது. அதுதான் நிலைமை.

## மாளிகைக்காட்டில் கடலரிப்பு தடுப்புப் பணிகள் ஆரம்பம்!

(அஸ்ஹர் ஆதம்)

மாளிகைக்காடு பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பைத் தடுக்கும் பொருட்டு இரண்டாவது அலைத் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசீமின் முயற்சியின் பயனாக கரையோரம் பேணல் பாதுகாப்புத் திணைக்களம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.





## போதைப்பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கு மாணவர்களுக்கு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

போதைப் பொருளும் மாணவர் சமூகமும் என்ற தொனிப் பொருளில் பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்கு மற்றும் விழிப்புணர்வு பண்டுவஸ்நுவர , பன்னவ முஸ்லிம் மத்திய கல்லூரியில் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பண்டுவஸ்நுவர இலவசக் கல்வி அமைப்பின் தலைவர் மொஹமட் றியாட், அமைப்பின் உறுப்பினர்கள், வை.ஜீ.எப்.பி. அமைப்பின் தலைவர், பாடசாலை ஆசிரியர்கள், போதை பொருள் நிவாரண துறை அதிகாரி இனோசிகா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்."

**மூப்பர் அம்பிலோகியோஸ்**
**(கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)**





# சந்நிதியான் ஆச்சிரமத்தால் ரூ.65 ஆயிரம் பெறுமதியான மூக்கு கண்ணாடி வழங்கல்!

சந்நிதியான் ஆச்சிரமத்தால் பதுளையைச் சேர்ந்த இஸ்லாமிய சகோதரருக்கு மூக்கு கண்ணாடி வழங்கப்பட்டது.

மலையகம் பதுளை பிரதேசத்தை சேர்ந்த இஸ்லாமிய சகோதரர் ஒருவர் விபத்தில் பார்வை குன்றிய நிலையில் இந்தக் கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது. 65 ஆயிரம் ரூபா பெறுமதியான மூக்கு கண்ணாடி இவ்வாறு வழங்கப்பட்டது.

இந்த உதவித் திட்டம் பதுளை சிறுவர் இல்லத்தில் வைத்து சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகளால் வழங்கப்பட்டது. ஆச்சிரம தொண்டர்களும் கலந்து கொண்டனர்.



# முல்லைத்தீவு ஊடகவியலாளருக்கு கிடைத்தது இளங் கலைஞர் விருது!

(ச.தவசீலன்)

ஊடகத்துறைசார்ந்த இளங் கலைஞர் விருதை முல்லைத்தீவு ஊடகவியலாளர் செல்வராசா சுமந்தன் பெற்றுக் கொண்டார்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச சபை மற்றும் கலாச்சார பேரவை இணைந்து நடத்தும் 2023 ஆம் ஆண்டுக்கான கரைதுறைப் பற்று பிரதேச பண்பாட்டு விழாவில் இந்த விருது வழங்கப்பட்டது.



இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பல்வேறு துறைகளில் பிரகாசித்து வரும் கலைஞர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

அந்தவகையில் ஊடகத் துறை சார்ந்த இளங்கலைஞர் விருது முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர் செல்வராசா சுமந்தனுக்கு வழங்கப் பட்டது.

# ‘விநோதக் கனவு’ நூல் அறிமுக விழா!

இலங்கை நெய்னார் சமூக நல காப்பகத்தின் ஏற்பாட்டில் ‘விநோதக் கனவு’ நூலின் அறிமுக விழா எதிர்வரும் 11 ஆம் திகதி 63, தெமட்டகொட வீதியில் அமைந்துள்ள வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்நூல் அறிமுக விழாவை பன்னூலாசிரியர் அஷ்ரஃப் சிஹாப்தீன் தலைமை தாங்குகிறார்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர், ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

விசேட விருந்தினர்களாக முஸ்லிம் நிகழ்ச்சி உதவிப் பணிப்பாளர் எம்.ஜே. பாத்திமா ரினூசியா கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் முதற் பிரதியை டாக்டர். எம்.ஏ.எம். முனீர் பெற்றுக் கொள்வார். மேலும் சிறப்பு பிரதிகளை ஊடகவியலாளர்கள், சமூக சேவையாளர்கள், கவிஞர்கள், பெருமக்கள் பெற்றுக் கொள்வர்.






இந்நிகழ்வில் கலந்து கொண்டு இளம் எழுத்தாளர் ரகீப் அல் ஹாதியை வாழ்த்தி ஊக்குவிக்குமாறு கேட்கப் பட்டுள்ளது.

கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் தரம் ஒன்பதில் கல்வி கற்கும் மாணவன் எம். எச். ரகீப் அல் ஹாதி எழுதிய ‘விநோதக் கனவு’ என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலே இவ்வாறு அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது.

இந்த நூல் ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி கொழும்பு ஸாஹிரா கல்லூரி மண்டபத்தில் மேலும் மூன்று மாணவர்களின் நூல்களுடன் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இராவணேஸ்வரன் சித்திர தேருக்கு நிதி உதவி வழங்கக் கோரிக்கை!

(எஸ். நிதர்ஷன்)

இராவணேஸ்வரன் சித்திர தேருக்கு நிதி உதவி வழங்குமாறு திருநீற்று சித்தர் என்று அழைக்கப்படும் , தவத்திரு கணபதி கதிர்வேல் சுவாமிகள் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் –

இராவணேஸ்வரன் சித்திர தேருக்கு நிதி சேகரிக்கும் அருள் பணியை ஆரம்பித்துள்ளோம். அதற்கு அடியவர்கள் உதவ வேண்டும்.

யாழ்ப்பாணம் செல்வ சந்நிதியில் இருந்து கதிர்காமத்துக்குப் பாத யாத்திரையை முன் நின்று நடத்தி வருகிறேன். யாத்திரையின் போது , முன்னின்று வேல் தாங்கி செல்பவன் நானே.

எதிர்வரும் காலத்தில் பாத யாத்திரையின் போது சித்திர தேரையும் இழுத்துச் செல்லவுள்ளோம். அந்த சித்திர தேரரை வடிவமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கான நிதியுதவிகளை அடியவர் தந்து உதவ வேண்டும்.– என்றார்.





# தொற்றாநோய் மற்றும் போசாக்கு தொடர்பில் கல்முனையில் பயிற்சி!

(எம்.ஏ.ஏ.அக்தார்)

தொற்றாநோய் மற்றும் போசாக்குத் தொடர்பில் கல்முனையில் பயிற்சி நெறி ஒன்று இடம்பெற்றுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உளநலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.நௌபலின் ஏற்பாட்டில் இது இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுகாதார பயிற்சி திணைக்களத்தில் விசேட தொற்றா நோய் மற்றும் சமூகக் கட்டமைப் பால் சிறந்த போசாக்கு தொடர்பான பயிற்சி நெறியை மேற்கொண்ட உத்தி யோகத்தர்களுக்கும் வீதிப் போக்கு வரத்து தொடர் பான பயிற்சி நெறியை நிறைவு செய்த சாரதிகளுக்கும் சான்றிதழ்கள் கல் முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் வைத்து வைக்கப் பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்தியர்கள் மற்றும் பணிமனை உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டனர்.





# கல்குடா தொகுதி விவசாயிகளின் வீதிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு!

(ந.குகதர்சன் )

கல்குடா தொகுதியில் வசிக்கும் பெரும்பாலான விவசாயிகளின் விவசாய நிலங்களை கொண்ட பிரதேசமாக கிடச்சிமடு, ஆத்திச்சேனை, மாக்குப்பை எனும் பகுதிகள் விளங்குகின்றன.

அந்த வகையில் இந்த விவசாய நிலங்களுக்குச் செல்லும் வீதியானது குன்றும் குழியுமாக காணப்பட்டது. விவசாயிகள் தங்கள் அறுவடை காலத்தில் நெல் மூடைகளை கொண்டு செல்வதில் கடுமையான கஷ்டத்தை அனுபவித்த வந்தனர்.

இந்த வீதியை முன்னாள் அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் காலத்தில் செப்பனிடப்பட வேண்டும் என்று அயராது உழைத்து தொடர்ச்சியாக அமைச்சரின் கவனத்துக்குக் காவத்தமுனை வட்டார அமைப்பாளரான சியாம் ஹாபிஸ் கொண்டு சென்றார். இதன் பலனாக அமைச்சரின் நிதி ஒதுக்கீட்டில் ரிதிதென்னை தொடக்கம் மாக்குப்பை வரையிலான 06 கிலோ மீற்றர் வீதி காப்பெட் மற்றும் கொங்ரீட் வீதியாக 100 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் நஸீர் அஹமட்டின் முயற்சியின் ஊடாக பல்வேறு அபிவிருத்திப் பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் கல்குடா பிரதேசத்தில் பௌண்ட்ரி வீதி, மத்திய வீதி – ரிதிதென்னை, பொத்தானை வீதி, வாகனேரி ஆகிய வீதிகள் முன்னாள் அமைச்சரின் முன்மொழிவுக்கு உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் அதற்கான வேலைகள் விரைவில் இடம்பெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# இலத்திரனியல் வகுப்புக்கு உபகரணங்கள் வழங்கல்!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட அல் பஹ்ரியா மகா வித்தியாலயத்துக்கு முதலாவது இலத்திரனியல் வகுப்புக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு நேற்று பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். பைஸால் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீம், கௌரவ விருந்தினராக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகருமான ரஹ்மத் 



மன்சூர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர் ஏ.எஸ். சலாம், பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் எம்.ஏ. அஸ்தர், உதவி அதிபர் திருமதி இ.றினோஸ் ஹஜ்மீன், பழைய மாணவர் அமைப்பின் செயலாளர் எம்.ஐ.எம். ஜிப்ரி, பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவினர், பாடசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், ரஹ்மத் பவுண்டேஷன் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




# திண்மக் கழிவகற்றல் சேவைகளை மேம்படுத்தக் கல்முனையில் ஏற்பாடு

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி அதிபர் நஸ்மியா சனூஸ் நேற்று செவ்வாய்க்கிழமை (07) கல்முனை மாநகர சபைக்கு விஜயம் செய்து, மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியை சந்தித்து, கல்லூரியில் திண்மக் கழிவகற்றல் சேவையை மேம்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடினார்.

இதன்போது பாடசாலைகளில் திண்மக் கழிவகற்றல் சேவையை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான பொறிமுறைகள் பற்றி ஆணையாளரால் தெளிவுபடுத்தப்பட்டது.

இதன் பிரகாரம் பாடசாலைகளில் குப்பைகளை தரம் பிரித்துச் சேகரிப்பதற்காக மாநகர சபையால் வகுக்கப்பட்டுள்ள விசேட திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு தமது கல்லூரி முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று அதிபர் உறுதியளித்தார்.

அத்துடன் குப்பைகளை தரம்பிரித்து சேகரிப்பதற்கான பைகளையும் மாநகர ஆணையாளரிடம் இருந்து அவர் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம். இஸ்ஹாக், மேற்பார்வையாளர் யூ.கே. காலிதீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# மாந்தை மேற்கு பிரதேசத்தில் சூழல் பாதுகாப்புக் கருத்தமர்வு

(மன்னார் நிருபர்)

அரச உத்தியோகத்தர்களுக்கான சூழல் பாதுகாப்புக் கருத்தமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை (7) மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வாழ்வுதயம் சூழல் பாதுகாப்பு பிரிவின் அனுசரணையுடன் மன்னார் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் சி. கனியூட் அரவிந்ராஜ் ஆரம்பித்து வைத்தார்.

கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.



மன்னார் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி.அருள்மலர் அந்தோனிப்பிள்ளை 'மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பொறுப்புகள், கடமைகள், சுற்றாடல் சார் சட்டங்கள், அனுமதிகள்' தொடர்பான கருத்துரை வழங்கினார். இறுதியில் பொதுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

# திறன் மேம்பாட்டுத் திட்டத்தில் அம்பாறையில் சான்றிதழ் வழங்கல்





**(அ.அஸ்வர்)**

அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான திறன் மேம்பாடு மற்றும் நிறுவன மொழித் திட்டமிடல் வசதி நிகழ்ச்சித் திட்டத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அம்பாறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

உத்தியோகபூர்வ மொழிக் கொள் கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அரச நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் உத்தியோக பூர்வ மொழிப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

அம்பாறை மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், ஆதார வைத்தியசாலை, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம், விவசாய சேவை பிராந்திய நிலையங்கள் மற்றும் தபால் நிலையங்கள் என்பன அம்பாறை மாவட்டத்தை மையமாகக் கொண்டு மக்களுடன் நெருக்கமாகச் செயற்படும் முன்னுரிமை நிறுவனங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்ட தேசிய ஒருங் கிணைந்த ஊக்குவிப்பு உதவி அதிகாரி எப். பிரதீஸ்கரனால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியின் வள பங்களிப்பை, மொழி செயலாக்க தொழில்நுட்ப அதிகாரிகளான கியானி விக்ரமசிங்க மற்றும் சதுரு ஜயதிலக்க ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில் அம்பறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம, மேலதிக மாவட்ட செயலாளர் வி. ஜெகதீசன், அம்பாறை பிரதேச செய லாளர் அனுருத்த சர்தருவன் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

மூன்று நாள்கள் நடைபெற்ற இச் செயலமர்வில் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.





# டெங்கு, பூச்சியியல் பயிற்சி பெற்றோருக்குச் சான்றிதழ்

**(றியாஸ் ஆதம், அஸ்ஹர் ஆதம், நூருல் ஹுதா உமர்**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோ சனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந் திய தொற்று நோய் தடுப்புப் பிரிவால் கல்முனை பிராந்தியத்தில் உள்ள நுளம்பு கட்டுப்பாட்டு கள உதவியாளர்க ளுக்கு டெங்கு, பூச்சியல் தொடர்பான பயிற்சி கருத்தரங்கு நடத்தப்பட்டது.

கருத்தரங்கில் கலந்து கொண்ட நுளம்பு கட்டுப்பாட்டுக் கள உதவியா ளர்களுக்கு நேற்று முன்தினம் (06) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வைத்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பிராந்திய தொற்று நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சீ.எம்.பஸாலின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற சான்றுதழ் வழங்கும் நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், பிரதிப் பணிப்பாளர் திருமதி டாக்டர் எஸ்.ஆர்.இஸ்ஸதீன் மற்றும் பிரிவுத் தலைவர்கள் கலந்து கொண்டு சான் றுதழ்களை வழங்கினர்.

# கல்முனை விதை நெல் சுத்திகரிப்பு ஆலைக்குள் புகுந்தன யானைகள்!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை நகர் மத்தியில் தரவை சித்தி வினாயகர் ஆலயத்துக்கு பின் புறமாகவுள்ள விதை நெல் சுத்திகரிப்பு ஆலைக்குள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு உட்புகுந்த காட்டு யானைகள் அங்கிருந்த விதை நெல் மூடைகளை துவம்சம் செய்தன. சுத்திகரிப்பு ஆலைக் கும் பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள் என.

அண்மைக் காலமாக கல்முனை பிராந்தியத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. பொது மக்கள் இரவு வேளையில் மிகவும் பீதியுடன் வாழவேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகி வருகின்றனர் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.




# சூழலில் மாணவர்களின் பங்களிப்பு தொடர்பான விழிப்புணர்வு மன்னாரில்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் மாவட்டத்தின் சூழலைப் பாதுகாப்பதில் கல்லூரி மாணவர்களின் பங்களிப்பு தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் நுட்ப கல்வி மாணவர்கள், உயர் கல்லூரி மாணவர்கள் என இளைய சமூகத்தின் பங்களிப்பை மேம்படுத்தும் நோக்குடன் கரிராஸ் வாழ்வுதயம் நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பிரிவால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் (06) உயிலங்குளம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்வும், மரம் நடுகையும் இடம்பெற்றது.

வாழ்வுதய சூழல் பாதுகாப்புப் பிரிவின் இணைப்பாளர் யேசுதாசன் ஒழுங்கமைப்பில் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் கல்வி இணைப்பாளர் மோகன் குரூஸ் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினராக வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்பணி அருள்ராஜ் குரூஸ் அடிகளார் கலந்து கொண்டார். மிசறியோ நிறுவனத்தின் நிதியின் ஊடாக அமுல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் நோக்கத்தையும், இளையோராக நமது சூழலை பாதுகாப்பதில் உள்ள நடைமுறை சாத்தியங்கள் பற்றியும் எடுத்துரைத்தார்.

# அரசியல் என்பதைத் தவிர்த்து மாவீரருக்குத் தொண்டாற்றுங்கள்!

## மாவீரர் பணிக் குழுவின் முன்னாள் செயலாளர் குமாரசிங்கம் கோரிக்கை

இலட்சிய கொள்கையில் தமது உயிர்களை துச்சம் என எண்ணி உயிர் தியாகங்களை செய்த எமது மாவீரர்களை நினைவு கூறுவதற்கு அல்லது அஞ்சலிப்பதற்கு அரசியலைத் தவிர்த்து முன் வாருங்கள்.

இவ்வாறு மாவீரர் பணி குழுவின் முன்னாள் செயலாளரும் தமிழ் தேசிய இளைஞர் பேரவையின் பிரதித் தலைவருமான ப.குமாரசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு–

இந்தக் கார்த்திகை மாதம், எமது மக்களின் நிரந்தர விடியலுக்காகத் தங்கள் இன்னுயிர்களை ஈந்தவர்களின் புனித மாதமாகும். எனவே இந்த காலத்திலாவது எமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் அரசியல் வேற்றுமைகளைக் கடந்து உணர்வுள்ள தமிழ்




மக்களாக எமது காவல் தெய்வங்களை ஒருமித்து அனுஷ்டிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

எனவே உணர்வு ரீதியாக இந்தத் தார்மீகக் கடமையை நிறைவேற்றும் பொருட்டு கட்சி அடையாளங்களையும் தனிநபர் விருப்பு வெறுப்புகளையும் விட்டுவிட்டுத் தமிழர்களாக ஒன்று கூட வேண்டியதன் அவசியத்தை நாம் நன்குணர்ந்தவர்களாக பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

இதன் மூலம் தமிழர்கள் அரசியல் கருத்துக்களில் வேறுபட்டிருந்தாலும் அவர்களின் ஆழ்மனது மாவீர தெய்வங்களின் கனவுகளோடும் அவற்றை நோக்கிய எண்ணங்களோடும் தொடர்கிறது என்பதை உலகுக்கு ஒரே குரலில் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறோம்.

எனவே மாவீரர்களின் கனவுகளை நிறைவேற்றுவதற்கு ஒன்றாக பொறுப்புடன் செயற்படுவோம். உன்னதமானவர்களின் ஆன்மாவின் வழிநடத்தலில் இலட்சிய பயணத்தை தொடர்வோம்.– என்றார்.






# பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ச் சங்கத்தின் குறிஞ்சிச்சாரல்!

பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ் தமிழ்ச் சங்கம் “எட்டுத்திக்கும் எங்கள் கலை” என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்த குறிஞ்சிச்சாரல் விழா கண்டி இந்து கலாசார மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவரும், தமிழ்ச் சங்க பெரும்தலைவருமான பேராசிரியர். எஸ். பிரசாந்தன், 97 ஆவது செயற்குழு தலைவர் மு. வினோ ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகர் ஆர். மகேஸ்வரன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் வை. நந்தகுமார், முன்னாள் தமிழ்த் துறை தலைவரும், தமிழ்ச் சங்க முன்னாள் தலைவருமான பேராசிரியர் துரை. மனோகரன் , முன்னாள் முதுநிலை விரிவுரையாளரும் தமிழ்ச்சங்க முன்னாள் பொருளாளருமான வ. தர்மதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது கீர்த்தனாஞ்சலி, சங்க கால ஐவகை நிலங்களின் குணாம்சங்களை வெளிப்படுத்தி சங்க நிலச் சங்கம நடனம், இசைச்சாரல், மண் வாசனை நடனம், சொற்போர், நாடகம் என பல்வேறு முத்தமிழ் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இந்த் நிகழ்வின் சிறப்பு விருதான சங்கச் சான்றோர் விருது இம் முறை மலையக மூத்த எழுத்தாளர் முருகன் சிவலிங்கத்துக்கு வழங்கப்பட்டது. இவர் இதுவரையில் 12 நூல்கள், 95 சிறு கதைகள், இரண்டு தமிழ் நாவல்கள் மற்றும் ஒரு ஆங்கில நாவல் என்பவற்றை எழுதியுள்ளார்.





## நிந்தவூர் ஆஸ்பத்திரியில் கிளினிக் பார்மசி திறப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் .ஐ எல் .எம். றிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் நேற்று (07)கிளினிக் பார்மசி திறந்து வைக்கப்பட்டது.

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் .எம்.பீ. அப்துல் வாஜித் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பணிமனையின் பிரதி பணிப்பாளர் டாக்டர் திருமதி ஸக்கிலா இஸ்ஸதீன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு குறித்த அலகைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்தியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் உட்பட கல்முனை ஆயுள்வேத பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம். ஏ. நபீல், பிராந்திய மேற்பார்வை மருந்தாளர் திருமதி இந்திரகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# மாணவனை தாக்கிய ஆசிரியை ஹட்டன் வலயத்தில் கைதானார்!

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் இலக்கம் 2 தமிழ் வித்தியாலயத்தின் தரம் 4 இல் கல்வி பயிலும் மாணவன் ஒருவனை ஆசிரியை ஒருவர் தடியால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அந்த ஆசிரியை பொகவந்தலாவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கைது சம்பவம் இன்று (08) புதன்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது–

தரம் 4 வகுப்பறையில் கடந்த (06) திங்கட்கிழமை ஆங்கில பாடம் இடம் பெற்றுக்கொண்டிருந்த வேளை அருகில் உள்ள மாணவன் தாக்கப்பட்ட மாணவனோடு கதைத்துள்ளார். இதனால் அந்த மாணவன் தாக்கப்பட்டார் என்று பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தில் பெற்றோரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

தாக்குதலுக்கு உள்ளான 9 வயது சிறுவனுக்கு வலது கை மற்றும் உடம்பின் பின் பகுதியில் காயங்கள் ஏற்பட்டுள்ளன. தாக்கப்பட்டமைக்கான சாட்சியங்கள் சிறுவனின் உடம்பின் பின்புறத்தில் காணப்படுவதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான சிறுவனிடம் 2 மணித்தியாங்களுக்கு மேலான வாக்கு மூலமும் தாக்குதல் சம்பவத்தை நேரில் கண்ட 5 மாணவர்களிடம் வாக்கு மூலமும் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சிறுவன் மீதான தாக்குதல் சம்பவத்துக்குப் பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் இலக்கம் 2 தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்று சிறுவனின் தந்தை பொலிஸ்மா அதிபர், பிரதிப் பொலிஸ்மா அதிபர், உதவி பொலிஸ்மா அதிபர், ஹட்டன் பொலிஸ் அதிகாரி ஆகியோரிடம் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

இந்த நிலையில் மாணவனைத் தாக்கிய ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சாரணர்களுக்குப் பயிற்சி பாசறை!





(சப்னா றிபாஸ்)

அக்கரைப்பற்று பெப்பிள்ஸ் கல்வி நிறுவனத்தின் இரு நாள் சாரணர் பயிற்சி பாசறை தலைமைக் அலுவலகத்தில் நடைபெற்றது.

கல்வி நிறுவனத்தின் தலைமை செயற்பாட்டு அதிகாரி இன்ஸாப் சரிப்டீன் தலைமையில் அதிபர் தாரீக் அஸ்ஸியின் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்ற இச் சாரணர் பயிற்சி பாசறையில் பல்வேறு கலை, கலாசார ,விளையாட்டு, வினோத நிகழ்வுகளும் நடைபெற்றன.

மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி, சுயதிறமைகளையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்தக் கூடிய வகையிலான ஆக்கத்திறன் நிகழ்வுகள், ஆபத்திலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான வழிகாட்டல் பயிற்சிகள், சுயமாகத் தமது வேலைகளைத் தாமே திறன்பட மேற்கொள்ளும் வகையிலான பயிற்சிகள், கூட்டுப் பொறுப்பையும் சமூக உணர்வையும் வழுப்படுத்தும் வகையிலான விழிப்புணர்வு நிகழ்வுகள், கலையாற்றல் மற்றும் ஆர்வத்தை வெளிப்படுத்தக் கூடிய கலை நிகழ்ச்சிகள், புத்தாக்க சிந்தனை வலுப்படுத்தக் கூடிய நுண்ணறிவு நிகழ் வுகள் என்பன இங்கு நடைபெற்றன.

நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றகுமத்துல்லாஹ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை, சங்கத்தின் தவிசாளரும் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளருமான யூ.எல்.எம்.ஹாசிம் ஆகியோரது தலைமையில் வளவாளர்களான எம்.எச்.ஹம்மாத், எம்.எப்.றிபாஸ் பாரதி, ஐ.எல்.ஜெலீல் கடாபி, ஜெயீனுடீன், செய்னுல் ஆப்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கல்முனை பாடசாலைக்கு கணினி அன்பளிப்பு

(எம்.என்.எம்.அப்ராஸ், அஸ்ஹர் ஆதம், எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை வலய இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு கணினி அன்பளிப்பு செய்யப்பட்டது.

பாடசாலையின் கணினித் தேவை கருதி, பஹ்றியன்ஸ் 2002 நலன்புரி அமைப்பிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து,அந்த அமைப்பினரால் பாடசாலைக்குக் கணினி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (06) இடம்பெற்ற காலை ஆராதனையில் வைத்து அதிபர் ஏ.ஜி.எம்.றிசாத்திடம் அமைப்பின் சார்பாக எஸ்.என்.ஹஸ்மி, எஸ்.எல்.நாசிக், ஏ.றியாஸ் ஆகியோர் கலந்து கொண்டு கணினி ஒன்றைக் கையளித்தனர்.



# யாழ். தொழில் நுட்பவியல் கல்லூரி பணிப்பாளர் ஓய்வு பெறுகின்றார்!

(ந.லோகதயாளன்)




யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரியில் பணிப்பாளராக கடமை புரிந்த சுப்பிரமணியம் முகுந்தன் இன்று புதன் கிழமையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்கின்றார்.

1992 ஆம் ஆண்டு இலத்திரனியல் போதனாசிரியராக யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் இணைந்து கொண்டவர். பலாலி ஆசிரியர் கலா சாலையிலும் வருகைதரு விரிவுரையாளராக சிலகாலம் சேவை புரிந்தார். விஞ்ஞான ஆசிரியர்களுக்கும், பொறியியல் தொழில் நுட்பவியல் பிரிவு ஆசிரியர்களுக்கும் இலத்திரனியல் சம்பந்தமான கருத்தரங்குகளை மேற்கொண்டவர்.

வவுனியா தொழில் நுட்பக் கல்லூரியின் அதிபராகவும் சேவை புரிந்த நிலையில் கடந்த 2016-03-03 முதல் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் பணிப்பாளராக பொறுப்பேற்று 10 ஆண்டுகள் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.



# தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கண்டி மக்களுக்கு உலருணவு!

(இக்பால் அலி)



கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் தீபாவளியை முன்னிட்டு கண்டி மாவட்டத்தில் உள்ள வறிய மக்களுக்கு உலருணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் தீபாவளியை முன்னிட்டு தமிழ் பாரம்பரிய விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டது. கண்டி அஸ்கிரிய விளையாட்டு மைதானத்தில் தலைவர் பி. குமாரதாஸ் தலைமையில் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கண்டி மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுக்குமார் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக தொழிலதிபர் எஸ். முத்தையா, பெ. பழனியப்பன், மூர்த்தி, மலையக கலைசார சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது கலஹா, தெல்தோட்டை, பன்விலை ஹந்தானை உள்ளிட்ட தோட்டப்புற பகுதியிலுள்ள 750 குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருவுணப் பொதிகள் வழங்கப்பட்டன.



வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்




AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VAN RENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882

# அ.தி.மு.க. கொடி, சின்னத்தை பயன்படுத்த தடை: ஓ.பி.எஸ். தரப்பு மேல்முறையீட்டு மனு தாக்கல்!



அ.தி.மு.கவின் பெயர், கொடி, சின்னம், கடித தலைப்பு போன்றவற்றை ஓ.பன்னீர்செல்வம் தரப்பு பயன்படுத்த விதிக்கப்பட்டுள்ள இடைக்கால தடையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஜுலை 11 ஆம் ஆண்டு நடந்த அ.தி.மு.க. பொதுக்குழுவில் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட 4 பேரை கட்சியில் இருந்து நீக்கியும், பழனிசாமியை இடைக்கால பொதுச் செயலாளராக தேர்வு செய்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதை எதிர்த்து ஓ.பி.எஸ். தொடர்ந்த வழக்கில், அவர் உட்பட 4 பேரை நீக்கி பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு தடை விதிக்க உயர் நீதிமன்றம் மறுப்பு தெரிவித்தது.

இந்த நிலையில், அ.தி.மு.கவின் பெயர், கொடி, சின்னம், கடித்த தலைப்பு போன்றவற்றை ஓ.பி.எஸ். தரப்பினர் பயன்படுத்த தடை விதிக்க கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி என். சதீஷ்குமார் நேற்று பிறப்பித்த உத்தரவில், பொதுக்குழு தீர்மானங்கள் மற்றும் பொதுச் செயலாளர் தேர்தலை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை எதுவும் விதிக்கவில்லை.

எனவே, அ.தி.மு.க. பெயர், கொடி, சின்னம், கடித்த தலைப்பு போன்றவற்றை, கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ள ஓ.பி.எஸ். மற்றும் அவரது தரப்பினர் பயன்படுத்த கூடாது என்று இடைக்கால தடை விதித்து, வழக்கை நவம்பர் 30 ஆம் திகதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டார்.

இந்த நிலையில், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஆர்.மகாதேவன் மற்றும் முகமது ஷபீக் ஆகியோர் அடங்கிய அமர்வில் ஓ,பி,எஸ், தரப்பில் ஒரு முறையீடு செய்யப்பட்டது.

தனி நீதிபதி பிறப்பித்துள்ள உத்தரவை எதிர்த்து, மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்ய உள்ளதாகவும், அந்த மனுவை அவசர வழக்காக விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்றும் முறையிடப்பட்டது.

இந்த முறையீட்டைக் கேட்ட நீதிபதிகள், மனு தாக்கல் செய்யும் நடைமுறைகள் முடிந்து, எண்ணிடும் நடைமுறைகள் முடிவுற்றால் இந்த வழக்கை எதிர்வரும் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்தனர்.

# அண்ணாமலை நடைபயணத்தில் அ.தி.மு.க, பா.ம.கவினர் பங்கேற்பு

## - திருமாவளவன் தெரிவிப்பு



அண்ணாமலை நடைபயணத்தில் அ.தி.மு.க, பா.ம.கவினர் பங்கேற்கின்றனர் என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம் பி, காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற தொகுதியில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக இன்று சிதம்பரத்தில் உள்ள அண்ணாமலை பல்கலைக்கழக விருந்தினர் மாளிகையில் தங்கி இருந்தார்.

அப்போது அவர் ஊடகங்களுக்கு சந்தித்து தெரிவிக்கையில்,

அண்ணாமலை நடைபயணத்தில் அ.தி.மு.க., பா.ம.கவினர் பெரும்பாலும் கலந்து கொள்கிறார்கள். இதில் பா.ஜ.கவினர் சொற்ப அளவிலே உள்ளனர் இப்படியே போனால் அ.தி.மு. கவையும் பா.ம.கவையும் பா.ஜ.க. விழுங்கிவிடும்.

இதற்கு நாட்டில் பல உதாரணங்கள் உள்ளன. பிறப்பின் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளை விடுதலை சிறுத்தைகள் கட்சி தொடர்ந்து எதிர்த்து வருகிறது. இந்து மதத்தை எதிர்க்கவில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் ஸ்மார்ட் மின் மீட்டரை பொருத்த தடை விதிக்க வேண்டும்.

இதனால் ஏழை எளிய மக்கள், நெசவாளர்கள், விவசாயிகள் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய இலவச மின்சாரம் கிடைக்காது. எனவே தமிழக அரசு ஸ்மார்ட் மின்மீட்டரை வைக்க அனுமதிக்கக் கூடாது. மோடி ஏழை மக்களை ஏமாளி என நினைத்துக் கொண்டு நாட்டில் ஊழலை ஒழித்து விட்டதாகக் கூறி வருகிறார். இது முற்றிலும் தவறானது. ஏழை மக்கள் வரும் நாடாளுமன்றத்தில் இதற்கு பதில் அளிப்பார்கள் என்று தெரிவித்துள்ளார்.

# காசா நகரின் மையப் பகுதிக்குள் இஸ்ரேல் இராணுவம் நுழைந்தது!

## - சுரங்கங்கள் மீதான தாக்குதல் தீவிரம்



இஸ்ரேல் – ஹமாஸ்களுக்கு இடையேயான போர் 33 ஆவது நாளை எட்டியுள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் படைகள் காசா நகரின் மையப்பகுதிக்குள் நுழைத்துள்ளது என அந்த நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது. மேலும், ஹமாஸ்களை சுற்றிவைளைத்துள்ள இஸ்ரேல் இராணுவம் ஹமாஸ்களின் பரந்த சுரங்கப்பாதைகளைக் கண்டு பிடித்து தாக்கத் தொடங்கியுள்ளது என கூறியுள்ளது.

காசா நகரின் மீது இஸ்ரேல் நடத்தி வரும் இந்த பதில் தாக்குதலில் இதுவரை 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். தரைவழியாகவும் தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ள இஸ்ரேல், தனது படைகள் காசா நகரன் மையப்பகுதியை அடைந்து ஹமாஸ் களை சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தி வருவதாக தெரிவித்துள்ளது.

மேலும், இஸ்ரேலின் தரைப்படைகள் ஹமாஸ்கள் ஏற்படுத்தி வைத்திருக்கும் நீண்ட சுரங்கப்பாதை வலையமைப்பை தற்போது தாக்கத் தொங்கியுள்ளதாகவும், சுமார் நூறு கிலோமீற்றர் வரை நீண்டு செல்லும் சுரங்கப்பாதைகளை தகர்ப்பதற்காக இஸ்ரேஸ் இராணுவ பொறியாளர்கள் வெடிமருந்துக்களை பயன்படுத்தி வருகின்றனர் என உயர் இராணுவ செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே போர் தொடங்கி ஒரு மாதத்தை நிறைவடைந்ததைத் தெரிவிக்கும் வகையில் தொலைக்காட்சியில் பேசிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ஒரு மாதத்தைக் கடந்துள்ள ஹமாஸ்களுக்கு எதிரான போர், அவர்கள் இதுவரை பார்த்திராதது.

இஸ்ரேல் இராணுவம் மாபெரும் சக்தியுடன் முன்னேறி வருகின்றது. இஸ்ரேலின் தரைப்படைகள் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும் ஹமாஸ்களுக்கு எதிரான பிடியைத் தீவிரப்படுத்தி வருகின்றன என்று அவர் கூறியுள்ளார்.

அத்துடன், ஈரான் ஆதரவு பெற்ற லெபனானின் ஹில்புல்லாக்கள் போரில் கலந்து கொள்ள விரும்பினால் அது மாபெரும் தவறு என்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இதேவேளை, ஹமாஸ்களை அழிப்பதில் இஸ்ரேல் இராணுவம் உறுதியாக உள்ளது. இஸ்ரேல் படைகள் காசாவின் மையப்பகுதிகுள் நுழைந்து விட்டன என்று இஸ்ரேலிய பாதுகாப்புத்துறை அமைச்சர், யோவ் காலண்ட் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், உயிர்காக்கும் மருந்துப்பொருள்களைச் எடுத்துச்சென்ற செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனங்கள் நேற்று காசா பகுதியில் தாக்குதலுக்கு உள்ளாகின. 5 லொறிகள், இரண்டு ஏனைய வாகனங்கள் மருந்துக்களை ஏற்றிச் சென்றுள்ளன. யார் இந்தத் தாக்குதலை நடத்தினார்கள் என்பது தெரிவிக்கப்படாத நிலையில், இரண்டு வாகனங்கள் சேதமானதாகவும், சாரதி ஒருவர் காயமடைந்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மருந்துகள் ஏற்றிச் சென்ற வாகனங்கள் தங்களின் பாதையை மாற்றிக்கொண்டு, அல் ஷிஃபா மருத்துவமனையில் மருந்துப் பொருள்கள் கொடுக்கப்பட்டதாக செஞ் சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

# பணயக் கைதிகள் விடுவிக்கப்படும் வரை காசாவிற்கு எரிபொருள் விநியோகம் இல்லை

## - இஸ்ரேல் திட்டவட்டம்

ஹமாஸ் – இஸ்ரேல் போர் நாளுக்கு நாள் உக்கிரமடைந்துவருகிறது, இந்த நிலையில், பணயக்கைதிகளை விடுவிக் கப்படும் வரை காசாவிற்கு எரிபொருள் வழங்கப்பட மாட்டாது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

242 பேர் ஹமாஸ் படையினரால் பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர். ஆனால் இன்னும் போருக்கு சுமூக தீர்வு எட்டப்படவில்லை. உலக தலைவர்கள் போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்து வருகின்றனர். ஆனால் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இதனை மறுத்து வருகிறார்.

அமெரிக்கா, ஹமாஸ்'க்கு எதிரான போரில் இஸ்ரேலுக்கு முழு ஆதரவு அளித்துள்ளது.

ஹமாஸை அழிப்பது அவசியம். ஆனால் அதற்காக ஹமாஸ் பிடியில் உள்ள காசாவை முழுவீச்சில் இஸ்ரேல் ஆக்கிரமிக்க நினைப்பது தவறு. மனிதாபிமான போர் நிறுத்தம் தேவை என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறிவருகிறார்.

இந்த நிலையில், பணயக்கைதிகளை ஹமாஸ் விடுவிக்கும் வரை காசாவிற்கு எரிபொருள் வழங்கப்பட மாட்டாது.



ஹமாஸ்'டனான போரையும் நிறுத்த முடியாது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித் துள்ளார்.